

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை பல்நோக்கு மருத்துவமனை வளாகம் அருகில் பாளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,அப்துல் வகாப் எம்.எல்.ஏ.மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன் கான், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெகதீஸ்,மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.ரேவதி,துணை மேயர் ராஜு, தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாபு,மத்திய மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,கனகராஜ், வழக்கறிஞர் தினேஷ் உள்பட பலர் உள்ளனர்.

### நெல்லையில் 71வது கூட்டுறவு வார விழா!

# 698 பயனாளிகளுக்கு ரூ.8.42 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

நெல்லை, நவ.18 - நெல்லையில் 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 698 பயனாளிகளுக்கு ரூபாய் 8.42 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு வழங்கினார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் நடைபெற்ற 71வது கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு மாவட்ட அளவிலான கூட்டுறவு வார விழா மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன் தலைமையில்

பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி ஆணையாளர் என். ஓ.சுகபுத்ரா,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான்,மாநகராட்சி துணை மேயர் கே.ஆர். ராஜு,கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் (161124 அன்று) நடைபெற்றது.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று பேச்சுப்போட்டி,கட்டுரை போட்டி,ஓவிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ,மாணவியர்களுக்கும், மேடைத்தளவாய் குமாரசாமி கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு பரிசுகளும் மற்றும் சிறந்த 32 கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களையும், பரிசுகளையும் வழங்கி தெரிவித்த தாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூட்டுறவு துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தது முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.அதனை பின்பற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விவசாயிகளுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கி வருகிறார்கள்.

1996 இல் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது எனக்கு கூட்டுறவு மற்றும் உணவுத் துறை வழங்கப்பட்டது. கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் கூட்டுறவு துறை மிகப்பெரிய வளர்ச்சியை பெற்றது. கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ரூபாய் 7000 கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாக சட்டமன்றத்தில் சொன்னதற்கு, அ.தி.மு.க.ஆட்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த செல்லூர் ராஜு 5700 கோடி கடன் தள்ளுபடி செய்யப் பட்டதாக சொன்னார்.கடந்த 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவுத்துறை மூலம் எந்த பலனும்,கடனும் விவசாயிகள் பெறவில்லை. கூட்டுறவுத்துறை தான் அனைத்து மக்களும் பயன்பெறும் துறையாக இருக்கிறது.தி.மு.க. ஆட்சியில் தான் பெண்களுக்காக 1000ம் பால்வள கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டது. நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு இலவச மின்சாரம், மீனவர்களுக்கு இலவச டீசல் ஆகியவை வழங்கப்பட்டது.

கூட்டுறவுத் துறையில் முறையாக தேர்தல் நடத்தப்பட்டது.மகளிர் சுய உதவிக் குழுக்களை முதன்முதலாக உருவாக்கி கூட்டுறவு துறையின் மூலம் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டு அக்குழுக்களை பொருளாதார முன்னேற்றம் அடைய செய்து மகளிர் குழுவினர் தனிப்பட்ட முறையில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வைத்தது. தி.மு.க. தான். கூட்டுறவு துறை மூலம் தான் அதிக அளவில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டது. தீவிர டெபாசிட் வாரம் என முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் நடத்தப்பட்டு 2 வாரத்தில் 2000 ம் கோடி டெபாசிட் 1996 ஆம் ஆண்டு பொதுமக்களிடம் பெறப்பட்டது.

தமிழகம் முழுவதும் 4,900 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் உள்ளது அதில் 1500 சங்கங்கள் தேசிய வங்கிகளுக்கு நிகராக மிகப்பெரிய டெபாசிட் தொகைகளோடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.மக்களுக்கு மிக மிக பயன்பெறும் துறையாக கூட்டுறவு துறை இருந்து வருகிறது. கூட்டுறவு மத்திய வங்கியில் நேரடி பணி நியமனம் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் காலத்தில் தான் செய்யப்பட்டது. உறுப்பினர்கள் யார் யார் என்று விவரங்கள் சரி பார்க்கக்கூடிய பணி தற்போது நடந்து வருகிறது. பெயரளவிலேயே உறுப்பினர்கள் இருக்கிறார்களா? உண்மையாகவே உறுப்பினர்கள் உள்ளனறா என்பது குறித்து சரி பார்ப்பதன் காரணமாகவே கூட்டுறவு தேர்தல் நடத்தப்படுவதில் காலதாமதம் இருந்து வருகிறது. கூட்டுறவு வங்கிகளில் மட்டுமே எளிதில் கடன்களை பெற முடியும் என்ற நிலை இருந்து வருகிறது. ஏழை,எளிய மக்களுக்கு,உழைப்பாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இக்கூட்டுறவு சங்கங்கள் பெரும் உதவி ஆற்றி வருகிறது.

தி.மு.க.ஆட்சி காலத்தில் தான் கூட்டுறவு சங்க தேர்தல் ஆனாலும், உள்ளாட்சித் தேர்தல் ஆனாலும் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதித்துவம் காக்கப்பட்டுள்ளது. சிறப்பாக செயல்படக்கூடிய இந்த அரசு உங்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே. என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட அளவிலான வார விழாவில் 561 விவசாயிகளுக்கு 663.25 இலட்சமும்,கால் நடை பராமரிப்பு கடன் 63 நபர்களுக்கு 42.32 லட்சமும், மத்திய காலக்கடன் 5 நபர்களுக்கு ரூபாய் 5.40 லட்சம்,மகளிர் சுய உதவி குழுக்கடன் 11 நபர்களுக்கு 93.85 லட்சம் வீட்டு அடமான கடன் 1 நபருக்கு ரூபாய் 2.50 இலட்சமும், மாற்றுத்திறனாளி கடன் 4 நபர்களுக்கு ரூபாய் 2.65 லட்சம்,பணிபுரியும் மகளிர் கடன் 1 மகளிருக்கு 3 லட்சமும்,சிறுவணிகள் கடன் 37 நபர்களுக்கு ரூபாய் 12.95 லட்சமும், கைபெண்கள்,கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் கடன் 3 நபர்களுக்கு 1.50 இலட்சமும்,PMMY (MUDRA) 2 நபர்களுக்கு 1.10 லட்சமும் சம்பள கடன் 5 நபர்களுக்கு 11.50 லட்சமும்,கலைஞர் அவர்களின் கனவு இல்லம் 4 நபர்களுக்கு 2 லட்சமும் ஆக மொத்தம் 698 பயனாளிகளுக்கு ரூபாய் 8.42 கோடி வழங்கப்பட்டது.

நிகழ்வில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.மு.முருகேசன் இணைப்பதிவாளர்செயலாட்சியர் மத்திய கூட்டுறவு வங்கி மா.உமா மகேஸ்வரி,துணைப் பதிவாளர் கோ.சுப்பையா,துணைப்பதிவாளர் டான்பெட் காந்தி ராஜ், நெல்லை மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன்,தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயக்குமார் (பாளை) முத்துச்செல்வி (நெல்லை) மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,சித்திக், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர் கள் எஸ்.வி.சுரேஷ், தர்மன்,பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ்,ஒன்றிய செயலாளர் அருள்மணி,மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி ஜான்ரபீந்தர்,மாணவரணி அலெக்ஸ் அப்பாவு,இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன்,பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை, உள்பட அரசு அலுவலர்கள்,கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், விவசாயிகள்,கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# எழும்பூர் தொகுதியில் 1,500 குடும்பங்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கல்!

சென்னை, நவ.18- கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் எதிர்வரும் நவம்பர் 27 அன்று வருவதை முன்னிட்டு, எழும்பூர் தொகுதியில் ஏழைஎளியோருக்கு உதவிடும் வகையில் நலத் திட்ட உதவிகள்; நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் கழகச் சட்டத் துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் 10.11.2024 முதல் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இதனின் இரண்டாவது நிகழ்வாக 16.11.2024 அன்று, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, எழும்பூர் ஆல்பர்ட் திரையரங்கம் எதிரிலுள்ள பொன்னியம்மன் கோவில் தெருவில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 1,500 ஏழைஎளிய குடும்பங்களுக்கு ஐந்து கிலோ கொண்ட அரிசிப் பை, புடவை,

பெட்ஷீட், கைலி மற்றும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சர்க்கரை, கோதுமை மாவு, ரவை, சாம்பார் மிளகாய்த் தூள், சமையல் எண்ணெய், கடுகு, வெந்தயம், சீரகம் உள்ளிட்ட 10 மளிகைப் பொருட்கள் கொண்ட தொகுப்பு ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் வழங்கினார்.



விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முதுகுளத்தூர் சட்டமன்றதொகுதி பொறுப்பாளர் சி.வேல்முருகன் முன்னிலையில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், பெயர் சேர்த்தல் மற்றும் நீக்குதல் பணியினை முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியம் முழுவதும் முதுகுளத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.சண்முகம் ஆய்வு செய்தார்.



தமிழகத்தில்ஊட்டச்சத்து திட்டத்தைக்கொண்டுவந்தவர்முத்தமிழறிஞர்கலைஞர் அவர்கள்என்று திண்டுக்கல்மாவட்டம்–பிள்ளையார்நத்தத்தில் நடைபெற்ற ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் இரண்டாம் கட்ட துவக்க விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார். அருகில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார், மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் எம்.பாஸ்கரன், கோட்டாட்சியர் சக்திவேல், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரிமுருகேசன், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், ஊராட்சி மன்றத்தலைவர் உலகநாதன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### திண்டுக்கல் மாவட்டம்!

# ஆத்தூர் தொகுதி – பிள்ளையார் நத்தம் ஊராட்சியில் ஊட்டச்சத்து திட்டம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார்! ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திண்டுக்கல், நவ.18 - தமிழகத்தில் ஊட்டச்சத்து திட்டத்தைகொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்று பிள்ளையா ர்நத்தத்தில் நடைபெற்ற ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் இரண்டாம் கட்ட துவக்க விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு 35 ஆண்டுகளாக தி.மு.கவிற்கு உறுதுணையாக இருக்கும் கிராமங்களில் பிள்ளையார்நத்தம் ஊராட்சியும் ஒன்று என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் தமிழக முதலமைச்சராக திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு பிறந்த குழந்தை முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தை வழங்கும் விதமாகவும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் அறிவித்து ஊட்டச்சத்தை உறுதி செய் என்ற திட்டத்தின் இரண்டாம் துவக்க விழா அரியலூர் மாவட்டத்தில் துவக்கி வைத்தார். அதன் பின்னர் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.நா. பூங்கொடி தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எம். பாஸ்கரன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, துணைச் செயலாளர் பிலால்உசேன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், ஊராட்சி மன்றத் தலைவர் உலகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட திட்ட அலுவலர் ச.பூங்கொடி வரவேற்று பேசினார். விழாவில் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கிவிட்டு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது அதிமுகவைச் சேர்ந்த உத்தம்சந்த் என்ற சட்டமன்ற உறுப்பினர் சத்துணவு சாப்பிடும் பிள்ளைகளுக்கு முட்டை தர முடியுமா என்று கேள்வி எழுப்பினார். உடனே கலைஞர் அவர்கள் சத்துணவு சாப்பிடும் அனைத்து குழந்தைகளுக்கும் முட்டை வழங்க உத்தர விட்டதோடு அத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தினார். அதன்பின்னர் கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து என்ற திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியதால் இன்று தமிழகத்தில் ஆரோக்கியமான குழந்தைகள், மாணவர்கள் உருவாகும் நிலை அன்றே உருவானது. தமிழகத்தில் அனைவருக்கும் வேறுபாடின்றி நலத்திட்டங்களை கொண்டு செல்லும் ஆட்சி தான் கழகத்தலைவர். இந்தியாவே போற்றும் ஒப்பற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. கடந்த இரண்டு மாதமாக ஆத்தூர் தொகுதியை சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள் தலைவர்கள், இன்னாள் தலைவர்கள் உட்பட வேறுபாடின்றி அனைவரும் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு வீடுகள் வழங்க அயராது பாடுபட்டுள்ளார்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார். அதன் தொடர்ச்சியாக பிள்ளையார் நத்தத்தில் இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன். திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 915 குழந்தைகள் கடும் ஊட்டச்சத்து குறைபாட்டினாலும், 1890 குழந்தைகள் மிதமான ஊட்டச்சத்து குறைபாடினாலும் உள்ளார்கள். இவர்களுக்கு ரூபாய் 1கோடியே18லட்சத்து17,531மதிப்பில் ஊட்டச்சத்து பெட்;டகம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றை தாய்மார்கள் பயன்படுத்தி ஆரோக்கியமான குழந்தையை வளர்க்க வேண்டும் என்றார். முன்னாள் முதல்வர் கலைஞர் முதல் தமிழக முதல்வர் கழகத்தலைவர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் இளைஞரணி ஆரம்பித்தது முதல் இன்று வரை திமுகவிற்கு உறுதுணையாக இருப்பது பிள்ளையார்நத்தம் ஊராட்சியே. இந்த ஊராட்சியில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் மாபெரும் வெற்றி பெறும். அதனால் இந்த ஊராட்சியில் இந்த திட்டத்தை துவங்கி வைப்பத்தில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் சக்திவேல், நிலக்கோட்டை ஒன்றிய செயலாளர் மணிகண்டன், மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி ராஜகணேஷ், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதாம்பாள்ஆல்பர்ட், திமுக நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, அருள்கலாவதி, ஆத்தூர் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கார்லின்செல்வராணி, ஒன்றிய பொறியாளர் ராமநாதன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் சிவக்குமார், பொருளாளர் ஜாதிக்கவுண்டன்பட்டி கருப்பையா, துணைச்செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, ராஜேந்திரன், மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் காணிக்கைசாமி, துணைச் செயலாளர் மல்லையாபுரம் சக்திவேல், பொருளாளர் தேவரப்பன்பட்டி போஸ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பொன்முருகன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வீரக்கல் செல்விகாங்கேயன், பாப்பாத்தி, ஊராட்சி மன்றத்தலைவர்கள் ராணிராஜேந்திரன், வீரக்கல் ராஜேஸ்வரி தங்கவேல், துணைத்தலைவர் யூஜின்ராஜா, அனுமந்தராயன்கோட்டை ஊராட்சி மன்றத்தலைவர் நிர்மலா இன்பராஜ், ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், செட்டியபட்டி ராஜா, பிள்ளையார்நத்தம் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் செல்வராணி, சின்னாளப்பட்டி பேரூர் கழக செயலாளர் மோகன்ராஜ், துணைச் செயலாளர் எம். ஆர்.ஜெயகிருஷ்ணன், பொருளாளர் எஸ்.ஆர். முருகன், முன்னாள் செயலாளர் தி.சு.அறிவழகன், பாலகிருஷ்ணன், சின்னாளபட்டி பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால், அரசு ஒப்பந்தகாரர்கள் ஜீசஸ்அகஸ்டின், மெல்வின், ஆலமரத்துப்பட்டி அரவிந்தன், விக்னேஷ்வரன், ராஜகணேஷ், பித்தளைப்பட்டி முன்னாள் மாவட்;ட பிரதிநிதி கிங் ராமகிருஷ்ணன், பித்தளைப்பட்டி கிளைச் செயலாளர் கோவிந்தராஜ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அருண்குமார், பிள்ளையார்நத்தம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் கவிதாமனோகரன், கிளைக்கழக செயலாளர்கள் எஸ்.கண்ணன், செல்வராஜ், ஆதிதிராவிடர் காலனி மாரியப்பன், பழனிச்சாமி, இளைஞரணியைச் சேர்ந்த ராஜா மற்றும் சின்னாளபட்டி திமுக நிர்வாகிகள் வடக்குத்தெரு சந்திரன், ரவிதண்டபாணி, செக்காபட்டி முத்துவேல் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட திட்ட அலுவலர் பூங்கொடி நன்றி கூறினார்.




தென்காசியில் 3 வது பொதிகை புத்தகத் திருவிழா இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற துவக்க விழா நிகழ்வு மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று புத்தகத் திருவிழாவை துவக்கி வைத்து உரையாற்றினார்.உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சங்கர்,ராணி ஸ்ரீகுமார் எம்.பி. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜா, பழனி நாடார்,சதன் திருமலை குமார், மாவட்ட வன அலுவலர் முருகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன் உள்பட பலர் உள்ளனர்.